# பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர். திரு.க.சிவக்குமார்

ந.க.எண். 72 / 2024 நாள் : 26.04.2024

பொருள் : மனைப்பிரிவு - தேனிமாவட்டம் - பூதிப்புரம் பேரூராட்சி - பூதிப்புரம் கிராம சர்வே எண்.374/1C-இல் திட்டமில்லா பகுதியில் அமையும் 14065 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியது - இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை :

1. தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது நடவடிக்கை ந.க.எண்.THENI/YPLGQOT5/2023/2023/TCP நாள்.19.10.2023
2. Diva Projects Private Limited முதல் தளம் 18, 699/700, அமின்ஜிகரை, சென்னை என்பவரது இணையதள விண்ணப்பம் எண். YPLGQOT5 நாள்.19.10.2024.
3. தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண். THENI/YPLGQOT5/2023/2023/TCP (சாலை வரைமுறை ஆணை நாள்.26.09.2023)
4. இணை இயக்குநர் வேளாண்மைத் துறை கடிதம் எண்.T4/6676/2023 நாள்.23.08.2023.
5. சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 19799/2020 நாள்.24.12.2020.
6. Diva Projects Private Limited முதல் தளம் 18, 699/700, அமின்ஜிகரை, சென்னை என்பவரது பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திர ஆவணம் எண்.9661/2023 நாள்.03.10.2023 மற்றும் தமிழ்நாடு மின்சார வாரித்திற்கான தான செட்டில்மெண்ட் பத்திர ஆவணம் எண்.9662/2023 நாள்.03.10.2023.
7. அரசாணை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை நாள்.04.06.2004 மற்றும் அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை நாள்.04.05.2017.
8. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
9. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.23.09.2020
10. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.09.12.2020 மற்றும் பூதிப்புரம் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.176/2024 நாள்.29.02.2024.

11. வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை அலுவலக கடிதம் எண்.1913/Nov4(3)/2017-1 நாள்.30.08.2017.
12. சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களது சுற்றறிக்கை எண். 13686/2017/LA1, நாள்.08.09.2017.
13. சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களது சுற்றறிக்கை எண். 320/2022/TCP3, நாள்.07.01.2022.
14. சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களது கடித ந.க.எண். 4367/2019/TCP2, நாள்.14.10.2019.
15. தொடர்புடைய ஆவணங்கள்.

*****

ஆணை :-

தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1-இல் காணும் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண்.THENI/YPLGQOT5/2023/2023/TCP நாள்.19.10.2023. தேனி மாவட்டம், பூதிப்புரம் பேரூராட்சி, சர்வே எண்.374/1C-இல் திட்டமில்லா பகுதியில் அமையும் 14065 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்திட கோரி வரப்பெற்ற பார்வை 2-இல் காணும் மனுதாரரான Diva Projects Private Limited என்பவரது இணைதள விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக, நிபந்தனைகளுக்குட்பட்டு THENI/YPLGQOT5/2023/2023/TCP என எண்ணிடப்பட்டு 65 மனைகளுக்கு கொள்கை அளவிளான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் Diva Projects Private Limited என்பவர் மூலமாக பார்வை 6 இல் காணும் தானப்பத்திரத்தின்படி, தேனி பத்திரபதிவு அலுவலக ஆவண எண்.9661/2023 நாள்.03.10.2023 இன்படி பாதைக்கான இடத்தினை தமிழ்நாடு அரசு மேதகு ஆளுநர் அவர்களது பெயரில் பதிவுசெய்யப்பட்டு மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களது பார்வை 1 இல் காணும் கடிதத்தில், ஆய்வுக்கட்டணம், செண்டேஜ் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்தொடர்ச்சியாக, பூதிப்புரம் பேரூராட்சி மன்ற பார்வை 10-இல் காணும் தீர்மானத்தின்படி, பூதிப்புரம் கிராமம் பூதிப்புரம் கிராமம் சர்வே எண்.374/1C-இல் திட்டமில்லா பகுதியில் அமையும் 14065 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவினை தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால், THENI/YPLGQOT5/2023/2023/TCP என எண்ணிடப்பட்டு 65 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிளான ஒப்புதல் வழங்கி வரப்பெற்றுள்ளதை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017 இன்படி நிலப்பயன் மாற்று கட்டணத்தொகை, சுஉர்ந்தாய்வுக் கட்டணம் தொகையும் வசூல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதன்படி மனைப்பிரிவிற்கு பின்வரும் விவரப்படி தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | கட்டண விபரம் | தொகை | செலுத்தப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | காலியிட மனை வரி | 726700 | இணையதள Payment Receipt Application No. YPLGQOT5 நாள்.27.03.2024 இன் படி தொகை ₹.1698093/-வரப்பெற்றுள்ளதனை பூதிப்புரம் பேரூராட்சி செலுத்து சீட்டு எண்.405/2023-2024 நாள்.27.03.2024 மூலம் வரவெடுக்கப்பட்டுள்ளது |
| 2 | 10 % நூலகவரி | 72670 | |
| 3 | கூர்ந்தாய்வு கட்டணம் | 65000 | |
| 4 | ஆய்வுக்கட்டணம் | 1000 | |
| 5 | இதரக்கட்டணம் (ச.அ) ரூ.1.00 வீதம் | 151396 | |
| 6 | நிலமாற்ற பயன்பாட்டுக்கட்டணம் | 681327 | |
| | மொத்தம் | 1698093 | |

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், பூதிப்புரம் பேரூராட்சி, பூதிப்புரம் கிராமம் சர்வே எண்.374/1C-இல் திட்டமில்லா பகுதியில் அமையும் 14065 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு, தேனி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் வரன்முறைப்படுத்தி THENI/YPLGQOT5/2023/2023/TCP என எண்ணிடப்பட்டு 65 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிளான ஒப்புதல் வழங்கியுள்ளதன்படிகீழ்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இறுதி ஒப்புதல் வழங்கியபின் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி செயல் அலுவலர், பூதிப்புரம் பேரூராட்சியால் ரத்து செய்யப்படும்.
2. எந்ததுறைக்காகவும் நில ஆக்கிரமிப்பு பட்டியலில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட மேற்படி இடம் தேர்வு செய்யப்பட்டிருப்பின் இவ்விறுதி ஒப்புதல் பொருந்தாது.
3. சாலை, மழைநீர் வடிகால், பாலம், குடிநீர் போன்றவை தரமானதாக உள்ளதா என்பதை பேரூராட்சி இளநிலை பொறியாளரிடம் அல்லது பொறியியல் கல்லூரியில் சான்று பெற்று சமர்பிக்கப்படவேண்டும்.
4. மின் கம்பங்கள் அமைத்து தெருவிளக்கு அமைக்கப்பட வேண்டும், சோலார் மின் விளக்குகள் ஏற்கப்படமாட்டாது, அனைத்து மனைகளும் விற்கப்படும் வரை/ கட்டிட வரைபட அனுமதி பெறும் வரை மின்கட்டணம் தங்களது சொந்த செலவில் செலுத்தப்படவேண்டும்.
5. தற்போது வசூல் செய்யப்பட்ட கட்டணத்தில் மாற்றம் அல்லது குறைவான வசூல் செய்யப்பட்டதாக கருதினால் தொகை செலுத்திட சம்மதக்கடிம் சமர்பிக்க வேண்டும்.

6. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடம் நீர்நிலை அருகில் உள்ளதால், பின்வரும் காலங்களில் நீர் நிலையினால் பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது பிற பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்பால் நிலம் சேதம் அடைந்தால் மாற்று இடம் வழங்கப்படவேண்டும்.

7. அரசு / உயர் அலுவலர்கள் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவு இதற்கு பொருந்தும்.

8. சாலை மற்றும் OSR Land தானமாக வழங்கப்பட்ட அசல் பத்திரம் / உள்ளாட்சி பெயருக்கு மாற்றப்பட்ட அசல் ஆவணம் வழங்கப்பட வேண்டும்.

9. இம்மனைப்பிரிவில் EWS பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டிருப்பின் அம்மனைகளை EWS பிரிவினருக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும்.

10. இம்மனைப்பிரிவில் அமையப்பெற்ற மழைநீர் வடிகாலின் முடிவில் வெளியேறும் பகுதியில் திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியேற்றப்பட்ட வேண்டும்.

26/4/24

செயல் அலுவலர்

பூதிப்புரம் பேரூராட்சி

தேனி மாவட்டம்.

இணைப்பு:- மனைப்பிரிவு வரைப்படம் மற்றும் நிபந்தனைகள்.

26/04/24 26/4/24

**பெறுநர்:-**

Diva Projects Private Limited

முதல் தளம் 18, 699/700,

அமின்ஜிகரை, சென்னை

**நகல் :-**

1. தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தேனி அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. தேனி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. போடிநாயக்கனூர் வட்டாச்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. சார்பதிவாளர் தேனி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.